# சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும்

## Negative Effects of Social Media on Moral Values of School Children

A.S.F. Yumna

Temporary Assistant Lecturer
Department of Education and child care, Eastern University, Sri Lanka.
fathima1994fa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன யுகத்தில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு உலகில் ஏற்பட்ட தொழிநுட்பப் புரட்சியும் காரணமாகவுள்ளது. அன்றாட வாழ்வின் செயற்பாடுகளைச் செயல்திறன் மிக்கதாகவும் துரிதமாக மேற்கொள்ளவும், அறிவுத் தேடலை அதிகரித்துக் கொள்ளவும் என பல்வேறு நோக்கங்களை இலக்காகக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட தகவல் பரிமாற்ற உபகரணங்கள் பல பிரச்சினைகளின் தோற்றுவாயாகக் காணப்படுகின்றது. வளரும் பயிர்களான இளவயதினர் நாகரீகம் என்ற அநாகரீக மாயைக்குள் தெரிந்தும் தெரியாமலும் விழுந்து, விழுமியங்களையும் கலாசாரங்களையும் புறந்தள்ளிவிடுவதனால் ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். அதிலும் பாடசாலை மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை பெரிதும் அதிகரித்துள்ளது. அதனால் பருவத்தை மீறிய பழக்கவழக்கங்களுக்குள் தள்ளப்பட்டு அவர்களின் விழுமியப் பண்புகள் சீர்கெட்டுப் போகும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் அதிகரித்த சமூகவலைத்தளப் பாவனையால் அவர்களின் விழுமியத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான ஆய்வுப் பிரதேசமாக கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட கல்வி வலயத்திற்குட்பட்ட மீரிகம கோட்டத்திலுள்ள 4 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்விற்காக நேர்முகங்காணல், வினாக்கொத்து மற்றும் அவதானம் ஆகிய ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக் கருவிகள் மூலம் நம்பகமும் தகுதியும் வாய்ந்த தரவுகள் பெறப்பட்டன. ஆய்வு முடிவுகளிலிருந்து, அதிகமான மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் பாவனையால் தமது விழுமியத்தை இழந்து வருகின்றனர். மேலும் உளவியல், சுகாதார, சமூக, ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு பிள்ளைகள் ஆளாகியுள்ளமையும் இவை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை பெருமளவில் பாதித்துள்ளமையும் கண்டறியப்பட்டன. இதனால் பாதிப்படையும் கற்றலையும் எதிர்காலத்தையும் வளம்படுத்த கற்றல் செயற்பாடுகளில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நடைமுறைப்படுத்தல், பெற்றோர் - பிள்ளை இடைத்தொடர்பை அதிகரித்தல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**

சமூக வலைத்தளங்கள், விழுமியம், பாதிப்பு

**அறிமுகம்**

இன்றைய நவீன உலகமானது இணையப் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கின்றது. கல்வி, மருத்துவம், சுகாதாரம், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் இதன் பயன்பாடானது பெருகி வருகின்றது. சுருக்கமாகக் கூறின் உள்ளங்கையில் உலகம் என்றாகிவிட்டது. இணையப் பயன்பாடானது பல்வேறு வலைத் தளங்களின் தளமாக அமைந்துள்ளது. பேஸ்புக், வட்ஸப், இன்ஸ்டாகிராம், கூகுள், யூடியுப், டிக்டொக் ஆகியன சமூக வலைத்தளங்களுக்கான சில உதாரணங்களாகும். தொடர்பாடல்

துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் ஓரங்கமாகவே இச் சமூக வளைத்தளங்களின் பாவனை சமூகத்தில் அதிகரித்துள்ளது.

இச் சமூக வலைத்தளங்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதனால் பாடசாலை மாணவர்கள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதனால் ஒழுக்கச் சீர்கேடுகள், பிறழ்வான நடத்தைகள், கலாச்சாரச் சீர்கேடுகள், கற்றலில் ஆர்வமின்மை, கல்வி விழிப்புணர்ச்சி இன்மை, உளவியல் ரீதியான தாக்கங்கள் போன்றவற்றால் பிள்ளைகள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். எனவே, சமூக வலைத் தளங்களின் அதிகரித்த பாவனையானது பாடசாலை மாணவர்களின் விழுமியத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்களையும் அவை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இனங்கண்டு ஆராய்வதன் மூலம் பிள்ளைகளின் விழுமியத்தையும் கற்றலையும் மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாதல், துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுதல், திருடுதல், பெற்றோர் பேச்சு மதிக்காமை, சினிமாவுக்கு அடிமையாதல், சிறு வயதிலே காதல் வலையில் சிக்கிக் கொள்ளல், தகாத விடயங்களைப் பார்ப்பதில் ஆர்வம், தேவையற்ற புகைப்படங்களை பகிர்தல், வதந்திகளைப் பரப்புதல், பாடசாலைச் சட்ட திட்டங்களை மீறுதல் போன்ற பல்வேறான வயதை மீறிய விடயங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கான முக்கிய காரணம் சமூக வலைத்தளங்களின் முறையற்ற பாவனையாகும்.

**ஆய்வு நோக்கங்கள்**

1. மாணவர்கள் அதிகமாக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
2. மாணவர்களின் விழுமிய விருத்தியில் சமூக வலைத்தளப் பயன்பாடானது எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கண்டறிதல்.
3. விழுமியம்சார் பாதிப்புக்கள் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டறிதல்.
4. மாணவர்களின் மத்தியில் விழுமியப் பண்புகளை வளர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

Meria Pesearo, (2014) சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனையால் பிள்ளைகள் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள், சமூகத்தவர்களோடு பழகுவது வரையறைக்குட்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்லாமல் பிள்ளைகளின் சமய நெறிமுறைகளிலும் இவை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சமய நெறிமுறைகள் குறையும் போது இயல்பாகவே பிள்ளைகளிடத்தில் குற்ற உணர்வுகள் உருவெடுக்கின்றன. இதனால் களவு, கொள்ளை, தகாத உறவுகள், மதுவிற்கு அடிமையாதல் போன்ற செயற்பாடுகளால் பாடசாலை இவ்வாறான பிள்ளைகளை ஏற்றுக் கொள்வதில்லை.

Pete Johnson, (1998) மாணவர்களில் 200 பேரை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 70 சதவீதத்தினர் ஒரு நாளில் அதிக நேரத்தை ஊடகங்களில் கழிக்கின்றனர். கட்டிளமைப் பருவத்தினர் வளர்ந்தவர்களின் விடயங்களை முக்கியமாக பாலியல் சார் விடயங்களை அறிவதில் மிகவும் ஆர்வம் கொள்ளவும், உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய பாட்டுக்களையும் படங்களையும் பார்ப்பதற்கும் சமூக ஊடகங்களில் யூடியூப் அதிகளவில் பங்களிப்புச் செய்கின்றன என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இவர்களின் கற்றல் சிந்தனைகள் மாறுபடுகின்றன. அதுமட்டுமல்லாமல் தற்பொழுது அநேகமாக

வளர்ந்தவர்களின் உள்ளடக்கங்களைக் கொண்டு video games தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை பிள்ளைகள் விளையாடுவதால் சிந்தனைகள் திசை திருப்பப்படுகின்றன.

Krushnasami, (2001) ஒரு நாட்டின் வளர்ச்சி இளைஞர்களின் கையில் தான் உள்ளது. சுறுசுறுப்புடன் செயற்பட வேண்டிய மாணவர்கள் சமூக வளைத்தளங்களில் சிக்கி தமது அடையாளத்தையே இழந்து வருகின்றனர். மேலும் பண வசூலுக்காக ஆபாசக் காட்சிகளை வெளியிடுவதானது மாணவர்களின் மனதைக் கெடுக்கின்றது. மேலும் இடைக்கிடையே காட்டும் விளம்பரங்களுக்கும் அடிமையாகியுள்ளனர். இதனால் எமது காலசாரமே அழிந்து வருகின்றது.

Ranwei, (2006) என்பவரின் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கிற்காக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல் என்ற ஆய்வில் இனையத்தளப் பாவனை, இணைய விளையாட்டு, மற்றும் இணையத்தில் அரட்டை போன்றவற்றுக்காக இளைஞர்கள் அதிகமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளதோடு தற்காலத்தில் உயர் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள் அதிக வசதிகளைக் கொண்டுள்ளதோடு அதிக செலவின்றி பெற முடிகின்றமையும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடிகின்றமையும் தான் கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள எனக் கூறியுள்ளார்.

Divajini, (2015) புதிய தொழிநுட்பங்கள் இன்று பாடசாலை மாணவர்களின் மையப் புள்ளியாக விளங்குகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பண்பாடு, விழுமியம், நெறிமுறைகள், காலாச்சார அம்சங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள் என அனைத்து அம்சங்களிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவாதாக அமைந்துள்ளது.

Robinson, (2006) திரைப்படங்கள், ஏனைய காட்சித் தொடர்பு சாதனங்கள் என்பவை வழமையாக இளையோரால் அடைந்து கொள்ள முடியாத உயர் நுகர்வு வாழ்க்கை முறையினை வெளிப்படுத்துகின்றன. வேறுபட்ட காட்சி வடிவங்களில் ஒன்று சேர்தல், பாலியல் ரீதியான காட்சிகள் தொடர்ச்சியான தூண்டுதலைத் தோற்றுவிக்கின்றன. இளைஞர், யுவதிகள் மேற்குறிப்பிட்ட செல்வாக்குகளுக்கு உட்பட்டு அவற்றைத் தானும் அடைந்து கொள்ள முயற்சிப்பதால் நெறிபிறழ்வான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லப்படுகின்றனர்.

**ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தியாயம் ஒன்றிற்கான ஆய்வு அறிமுகத்தில் அறிமுகம், ஆய்வின் பின்னணி, ஆய்விற்கான நியாயம், ஆய்வுப் பிரச்சினைகள், ஆய்வின் நோக்கங்கள் ஆய்வுப் பிரதேசம் என்பன தொடர்பான செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆய்வுப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதற்கும் ஆய்வுநோக்கங்களை உருவாக்கவும் ஆய்வு தொடர்பான முன்னைய அறிவு அவசியமாகும். இதற்காகவே இலக்கிய மீளாய்வு இரண்டாவது அத்தியாயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அத்தியாயம் மூன்றில் ஆய்வு முறையியல் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், நான்காவது அத்தியாயத்தில் தரவுகளின் பகுப்பாய்வும் அமைந்துள்ளது. தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியில் அமைந்த கலப்பு முறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. அளவு, எண் ரீதியிலான முறையியலாக எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், வரைபுகள், மாணவர்தொகை, வரைபடங்கள், விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆய்வுக் கருவிகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் தொடர்பான முடிவுகளைத் தொகுத்து ஐந்து அத்தியாயங்களாக இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மாதிரித் தெரிவு**

**அட்டவணை 2 : மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் விபரம்**

இவ்வாய்வானது கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட கல்வி வலயத்திற்குட்பட்ட மீரிகம கோட்டத்திலுள்ள 4 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மொத்த மாணவ மாதிரிகளில் 1:2 என்ற விகிதத்தில் 100 மாணவர்களும் ஒரு பாடசாலையிலிருந்து 10 ஆசிரியர்கள் வீதம் 1:10 என்ற விகிதத்தில் 40 ஆசிரியர்களும் ஒரு பாடசாலைக்கு 5 பெற்றோர்கள் வீதம் 1:5 என்ற விகிதத்தில் 20 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

| மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் | | ஆய்வுப் பிரச்சினைக்கு உட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| A | 1C | 96 | 48 | 10 | 5 |
| B | 1C | 56 | 28 | 10 | 5 |
| C | TypeII | 40 | 20 | 10 | 5 |
| D | TypeII | 08 | 04 | 10 | 5 |
| **மொத்தம்** | | **200** | **100** | **40** | **20** |


**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**


இவ்வாய்வானது பொது நோக்கம் உருவாக்கப்பட்டு அது பல சிறப்பு நோக்கங்களாக்கப்பட்டு அதனடிப்படையில் பல்வகை வினாக்கள் உருவாக்கப்பட்டு வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானிப்பில் இருந்தும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அளவுசார் மற்றும் பண்புசார் தகவல்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு Microsoft Office Excel உதவியுடன் சலாகை வரைபுகள், அட்டவணைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

Ranwei, (2006) என்பவரின் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கிற்காக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல் என்ற ஆய்வில் இனையத்தளப் பாவனை, இணைய விளையாட்டு, மற்றும் இணையத்தில் அரட்டை போன்றவற்றுக்காக இளைஞர்கள் அதிகமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளதோடு தற்காலத்தில் உயர் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள் அதிக வசதிகளைக் கொண்டுள்ளதோடு அதிக செலவின்றி பெற முடிகின்றமையும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடிகின்றமையும் தான் கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள எனக் கூறியுள்ளார்.

எனது ஆய்வின் படி, பாடசாலை மாணவர்களில் அதிகமானவர்கள் கைத்தொலைபேசி, கணனி, தொலைக்காட்சி ஆகிய தொடர்புசாதனங்களைப் பயன்படுத்துவதோடு முகநூல்,

யூடியுப், இன்ஸ்டகிரம், வட்ஸப் போன்ற சமூக வலைத்தளங்களையும் அதிகமானவர்கள் பயன்படுத்துகின்றனர்.




**உரு 1: மாணவர்களை அதிகம் கவர்ந்த தொடர்பு சாதனங்கள்**

**உரு 2: மாணவர்களைக் கவர்ந்த சமூக வலைத்தளங்கள்**

**முடிவுகளும் கலந்துரையாடலும்**

**மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள்.**

பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட சமூக வலைத்தளங்கள் பயன்பாட்டிலுள்ளன. அந்த வகையில் மாணவர்களிடம் சமூக வலைத்தளங்களை நீர் பயன்படுத்தக் காரணம் யாது? எனக் கேட்ட போது மாணவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 : சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றமைக்கான காரணங்கள்**

| காரணங்கள் | | வீதம் |
|---|---|---|
| 1 | சினிமா நிகழ்ச்சிகளைப் பார்வையிடல் | 79% |
| 2 | குறுஞ்செய்தி அனுப்புதல் | 68% |
| 3 | நட்புக்களை உருவாக்கிக் கொள்ளல் | 80% |
| 4 | பொது அறிவை வளர்த்துக் கொள்ளல் | 25% |
| 5 | கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடல் | 22% |
| 6 | ஓன்லைன் விளையாட்டுக்கள் | 74% |
| 7 | வேறு காரணிகள் | 45% |

மேற்படி தரவுகளிலிருந்து பாடசாலை மாணவர்கள் கற்றலுக்காகச் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதென்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

**மாணவர்களின் விழுமிய விருத்தியில் சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள்.**

இம் மாணவர்களின் விழுமிய விருத்தியில் சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களாக பின்வருவன அடையாளங் காணப்பட்டன. மாணவர்கள் போதைப் பொருளிற்கு அடிமையாகியுள்ளனர் - ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 58 சதவீதமானோர் தூள் மற்றும் சிகரட் பயன்படுத்தி தண்டனைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் இதற்கான முக்கிய காரணம் போதைப் பொருள் விளம்பரங்களும், தீய நட்பு வட்டாரங்களின் உருவாக்கமும், பெற்றோர்களின் கவனயீனமும் என்றும் அறியப்பட்டது. இது தொடர்பாகப் பெற்றோர்களிடம் கேட்கப்பட்ட போது பாடசாலை மூலம் தகவல் கிடைக்கப்பெற்றதன் பிறகே தங்களுடைய மாணவர்கள் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியும் என்று குறிப்பிட்டனர்.

பெற்றோர் சொல்லை மதிக்காமை - 44 சதவீதமான பெற்றோர்கள் தாங்கள் எவ்வளவு கற்றலுக்கான வசதிகளைச் செய்து கொடுத்த போதிலும் பாடசாலை நேரம் அல்லாத நேரங்களில் சமூக ஊடகங்களிலும் ஒன்லைன் விளையாட்டுக்களிலும் பெரும் பகுதி நேரத்தைச் செலவளிப்பதாகக் கூறுகின்றனர். இதைக் கண்டிக்கும் போது பெற்றோர்களுக்கு தாங்கள் கல்வி சம்பந்தமான விடயங்களைப் பார்க்கின்றோம் என்றும் இணையத்தில் தகவல்களைத் திரட்டுமாறு ஆசிரியர்கள் பணித்துள்ளதாகவும் கூறுகின்றனர். தொடர்பு சாதனங்களை அவர்கள் கேட்கும் போது கொடுக்காவிட்டால் கோபம் காட்டுவதாகவும் நண்பர்களுடன் சேர்ந்து அவர்களின் தொடர்புசாதனங்களைப் பயன்படுத்துவதாகவும் கூறுகின்றனர். மேலும் இதனைப் பயன்படுத்த ஆரம்பித்தால் தாங்கள் ஒரு உதவி கேட்டாலும் கேட்காதவாறு நடந்து கொள்கின்றார்கள் எனவும் அனுதாபத்துடன் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியுள்ளமை - 37 சதவீதமான மாணவர்கள் பயமுறுத்தல், அச்சுறுத்தல், இலத்திரனியல் திரட்டு மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளில் சிக்குதல் போன்ற உளவியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கும் ஆபாசப் படங்களைக் காட்சிப்படுத்தல், பாலியல் தேவைகளுக்கு இணங்க வைத்தல், சிறுவர்களை நிர்வாணமாகப் படமெடுத்து பதிவு செய்தல், காட்சிப்படுத்தல் போன்றன பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகியுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றது. இதற்கான முக்கிய காரணம்

என்னவெனில் சமூக வலைத்தளங்களின் முறையற்ற பாவனையாகவே இருந்தது. மேலும் இவர்கள் அதிகமான fake accounts வைத்திருப்பவர்களாகவும் கண்டறியப்பட்டனர்.

சமூக விரோத செயல்களில் ஈடுபடல் - ஏனைய மாணவர்களை விட இம் மாணவர்களின் கையில் அதிகமாகப் பணம் இருப்பதாகவும் இது தொடர்பாகப் பெற்றோர்களுக்கு அறிவித்த போது அவர்கள் பாடசாலையில் கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் அதற்குரிய பணத்தைக் கொண்டுவரச் சொன்னதாகவும் கூறி பணம் கேட்கின்றனர் என பெற்றோர்கள் கூறுவதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர். மேலும் ஆசிரியர்கள் இது தொடர்பாக இம் மாணவர்களின் சக நண்பர்களிடம் விசாரித்த போது குறித்த அம் மாணவர்கள் இன்டர்நெட் கார்ட், சிப், சிம் என்பன அடிக்கடி இவர்கள் வாங்குவதாகக் கூறி இருக்கின்றனர். அது மட்டுமல்லாமல் வகுப்பறையில் சக மாணவர்களின் காசு களவெடுத்திருப்பதாகவும் முறையிட்டனர் எனவும் ஆசிரியர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். எனவே தான் இம் மாணவர்கள் களவு, பொய், ஏமாற்றுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வளர்ந்து வரும் போதும் இப் பழக்கங்கள் தொடர்ந்து சமூகத்தில் பல்வேறான பிரச்சினைகளை உருவாக்கும்.

எதிர்பாலாருடனான தொடர்புகள் அதிகரித்துள்ளமை - 33 சதவீதமான மாணவர்கள் காதல் பிரச்சினைகளில் அகப்பட்டு பாடசாலையில் தண்டிக்கப்பட்டுள்ளனர். பாடசாலையில் பரிசுப் பொருட்களைப் பகிருதல், கைத்தொலைபேசி கொண்டு வருதல், மாலை நேர வகுப்புக்களுக்குச் செல்வதாக பெற்றோர்களிடம் கூறிவிட்டு வகுப்புக்களுக்குச் செல்லாது குறித்த நபர்கள் சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற பல வயதைத் தாண்டிய செயற்பாடுகளில் ஈடுபட்டு பாடசாலை மட்டத்தில் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

ஆபாச சினிமாக்கள் மற்றும் வீடியோக்களைப் பகிருதல் - இம் மாணவர்களில் 25 சதவீதமானவர்கள் ஆபாச சினிமா மற்றும் வீடியோக்கள் அடங்கிய இருவெட்டுக்கள் வகுப்பறையில் பகிர்ந்து கொண்டு தண்டிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தளவிற்கு சிறுவயதில் எண்ணங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் பெற்றோர் - பிள்ளை இடைத்தொடர்பு குறைவும் சமூக வலைத்தளங்களின் எல்லை மீறிய உபயோகமும் ஆகும்.

சண்டை சச்சரவுகளில் கலந்து கொள்வதில் ஆர்வம் - மாணவர்களில் 66 சதவீதமானவர்கள் சண்டை விளையாட்டுக்களில் ஆர்வமுள்ளவர்களாகக் காணப்பட்டனர். பிள்ளைகளில் பெரும்பாலானோர் அதிகமாக online fighting games இனை விரும்பி விளையாடுபவர்களாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வார்வமானது பிள்ளைகளிடம் நடத்தைப் பிரச்சினைகளை உருவாக்கும். வளர்ந்தவர்களாகும் போது சமூகத்திலும் குழப்பம் விளைவிக்கக் கூடியவர்களாகவும் சண்டை சச்சரவுகளின் போது அதற்கு முன்னிற்பவர்களாகவும் காணப்படுவர்.

**விழுயம்சார் பாதிப்புக்கள் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்.**

கற்றல்சார் விடயங்களைப் பகிர்ந்து கொள்வதில் ஆர்வமின்மை - மாணவர்கள் பாடசாலையில் ஆசிரியர் வராத நேரங்களில் அல்லது இடைவேளை நேரங்களில் கல்விசார் விடயங்களைப் பற்றி சக நண்பர்களுடன் கதைப்பது குறைவாகக் காணப்பட்டது. அதிகமாக தங்களுடைய நண்பர்களுடன் சினிமா நடிகர்களைப் பற்றிக் கதைப்பதுடன் அவர்களின் நடிப்புக்களையும் நடித்துக் காட்டுகின்றனர். மேலும் தலை முடி, மீசை போன்றன நடிகர்களைப் போன்று வெட்டி பாடசாலையில் தண்டனைக்குள்ளான சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அத்தோடு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தாத பிள்ளைகளை இம் மாணவர்கள் ஏளனம் செய்வதாகவும் தாங்கள் தான் பெரியவர்கள் என்ற ஒரு நிலைப்பாட்டையும் வெளிக்காட்டுகின்றனர்.

வீட்டு வேலைகளைச் செய்து வராமல் தண்டனைக்கு உள்ளாகுதல் - மாணவர்கள் பாடசாலை அல்லாத ஏனைய நேரங்களில் நண்பர்களுடனும் சமூக ஊடகங்களிலும் நேரத்தைக் கழிப்பதால் பாடசாலை வேலைகளைச் செய்து வராமல்

தண்டனைக்குள்ளாகுகின்றனர். கற்றல் செயற்பாடுகளில் ஊக்கமற்று காணப்படுகின்றனர். சில நேரங்களில் வீட்டு வேலைகளைச் செய்யாததன் காரணமாக ஆசிரியரின் தண்டனைக்குப் பயந்து பாடசாலைக்கு வராமல் விடுகின்றனர். இதனால் இவர்களின் பாடசாலை வரவு பாதிக்கப்படுகின்றது.

வகுப்பறையில் குழப்படி செய்யும் தன்மை அதிகம் - இம் மாணவர்கள் ஒன்லைன் விளையாட்டுக்களான fighting games (PUBG, Kungu Fu, Karate) போன்ற விளையாட்டுக்களில் அதிகம் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அவ்வாறான விளையாட்டுக்களை விளையாடும் பிள்ளைகள் பாடசாலையில் சக மாணவர்களுடன் அடிக்கடி சண்டை பிடித்துக் கொள்ளுதல், ஏசுதல், தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் போன்றன இவர்களிடம் காணப்பட்டன.

பாடசாலைக்கு வருவதில் ஆர்வமின்மை – 12 சதவீதமான மாணவர்கள் பாடசாலை வருவதில் ஆர்வமற்றவர்களாகக் காணப்பட்டனர். அதில் 8 சதவீதமான மாணவர்களின் முக்கிய காரணமாக அமைந்த விடயம் என்னவெனில் சமூக வலைத்தளங்களினால் எதிர் நோக்கிய அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள், பாலியல் ரீதியான பயமுறுத்தல்கள் மற்றும் காதல் பிரச்சினைகளால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப் பிரச்சினைகள் பாடசாலையில் ஏனையவர்களுக்கும் தெரியும் என்பதால் தன்னை தப்பபிப்பிராயத்துடன் பார்ப்பார்கள் என்ற ஒரு எண்ணமும் இவர்களை பாடசாலைக்கு வருவதில் ஆர்வமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சைப் புள்ளிகளில் பின்னடைவு – 68 சதவீதமான மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் கணிப்பீட்டுப் புள்ளிகள் குறைவாகக் காணப்பட்டது. இதற்கான முக்கிய காரணங்களில் சுய கற்றலின்மை மற்றும் கற்பதில் ஊக்கமின்மை என்பன காணப்பட்டன. பாடசாலை நேரமல்லாத ஏனைய நேரங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சுய கற்றலுக்கான வசதிகளைச் செய்து கொடுத்த போதிலும் தாங்கள் இணையத்தில் கற்பதாக பெற்றோர்களை ஏமாற்றிவிட்டு வேறு தேவைகளுக்காக ஊடகங்களில் நேரத்தை வீணடிக்கின்றனர். இதனால் கற்றல் பாதிக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தொடர்புசாதனங்களில் நேரத்தைக் கழிப்பதை குறைத்துக்கொள்ளல். பெற்றோர்கள் தங்களுடைய சுய கௌரவத்திற்காக விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசிகளை பாவிப்பதானது பிள்ளைகளை பாவிக்க தூண்டச் செய்யும். எனவே தாங்களும் அவ்வாறு பாவிக்காது பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட பாவனைக்காக கணனி, கையடக்கத் தொலைபேசி போன்றவற்றை வாங்கிக் கொடுக்காமல் இருத்தல். இலத்திரனியல் தொடர்பு சாதனங்களை பிள்ளைகளின் அறைக்குள் வைக்காது பொதுவாகப் பாவிக்கும் இடங்களில் வைத்தல்.

பிள்ளைகள் தொடர்புசாதனங்களில் என்ன செய்கிறார்கள்? எதைப் பார்க்கிறார்கள்? என்பது தொடர்பில் பெற்றோர் விழிப்பாக இருத்தல். அதற்காக கையடக்கத் தொலைபேசிகளிலும் கணனிகளிலும் காணப்படும் parental control என்பதை செயற்படுத்தும் முறை தொடர்பாக பெற்றோர்களுக்கு வழிகாட்டல்.

ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டின் போது முழுவதுமாக கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தாது விடல். சமூக வலைத்தளங்களின் நன்மை, தீமைகள் குறித்து வீதி நாடகங்கள், விவாதப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என்பவற்றை பாடசாலை மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.

கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி சாதனங்களில் காணப்படும் விளையாட்டுக்களின் விளைவுகள் குறித்து பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆலோசனைகளை வழங்குதல். மாணவர்களை உடல் சக்தி தரும் விளையாட்டுக்களின் பக்கம் திசை திருப்புதல். இது அவர்களின் உடலையும் மூளையையும் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும். கரம், செஸ், Cross word எண் அட்டை நூறு சதுர பெட்டி போன்ற வகுப்பறையில் இருந்து சிந்தித்து செய்யும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

பாடசாலையில் பூந்தோட்டம் , மரக்கறித்தோட்டம் அமைத்து அதில் இரசனையும் ஈடுபாடும் காட்டவைத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் மாணவர்களில் தாமாகவே பாடசாலையை விரும்ப வைப்பதோடு ஆர்வத்துடன் பாடசாலைக்கு வரும் மனநிலையை உருவாக்குதல் வேண்டும்.

ஓவியம், நடனம், கைப்பணிகளைச் செய்வதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு வீட்டில் தோட்டம் செய்தல், பிராணிகளை வளர்த்தல் போன்ற விடயங்களுக்கு ஊக்குவிப்பை வழங்குவதன் மூலம் இலத்திரனியல் ஊடகங்களை மறக்கச் செய்தல். வாசிப்பதற்கு சுவாரசியமான புத்தகங்கங்களை வாங்கிக் கொடுத்தல்.

முகப்புத்தகத்தில் தொடர்புபடும் நண்பர்கள் தொடர்பில் கவனமாக இருத்தல். பிள்ளைகள் முகம் தெரியாத நபர்களுடன் பேசுதல், புகைப்படங்களைப் பதவிறக்கம் செய்தல் போன்றவற்றை தவிர்த்தல்.

மாணவர்களுக்கு good touch, bad touch தொடர்பான விடயங்களைப் பேசும் சித்திரங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் தெளிவுகளை வழங்கல். பாலியல் கல்வியை ஒவ்வொரு வயதிற்கும் ஏற்றவாறு ஆரம்பப் பிரிவிலிருந்தே வழங்குதல்.

பிள்ளையொன்று துஷ்பிரயோகத்திற்கு அல்லது புறக்கணிப்புக்கு ஆளாகும் போது 24 மணித்தியாலயங்களும் சேவையிலுள்ள 1929 சிறுவர் தொலைபேசிச் சேவை தொடர்பாக மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் தெரியப்படுத்தல்.

விடுமுறை நாட்களில் சுற்றுலாக்கள், சிறு பயணங்கள் போன்றவற்றை மேற்கொள்ளல். நூலகங்கள், அரும்பொருட்காட்சி சாலைகள், மிருகக்காட்சி சாலைகள், வரலாற்றுத் தளங்கள், கலாசாரச் செயற்பாடுகள் போன்றவற்றிற்கு குடும்பமாக விஜயம் செய்து பெற்றோர் பிள்ளை இடைத்தொடர்பை அதிகரிக்க வேண்டும்.

போதைப் பொருள்கள் பாவிப்பதால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் பின் விளைவுகள் குறித்து பிள்ளைகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல். கைச் செலவிற்கு பணம் கொடுக்கும் போது பெற்றோர்கள் பிள்ளையுடன் சேர்ந்து எதற்காகப் பணம் தேவைப்படுகின்றதென்பதைத் தீர்மானிக்க வேண்டும். பணம் வழங்குவதை ஒரு அழுத்தமாகப் பாவிக்கக் கூடாது.

பிள்ளைகள் தனது நண்பர்களைச் சந்திக்க அல்லது ஒரு விழாவுக்குச் செல்லும் போது நீ எங்கு செல்கிறாய்? யாரைச் சந்திக்கப் போகிறாய்? யார் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்கின்றார்? எந்த வயதுக் குழுவினருக்கானது? எப்போது மற்றும் எவ்வாறு நீ வீடு திரும்புவது போன்ற கேள்விகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

பிள்ளைகளுடன் இருக்க சந்தர்ப்பம் கிடைக்கும் போது குழு விளையாட்டுக்களில் ஈடுபடல், குடும்பமாக ஒன்றித்து வேலைகளில் ஈடுபடல், குடும்பத்துடன் சேர்ந்து உணவு உண்ணல் போன்றவற்றின் மூலம் பிள்ளைகளுடன் கழிக்கும் நேரத்தை அதிகப்படுத்திக் கொள்ள பெற்றோர்களுக்கு ஆலோசனைகளை வழங்கல்.

Quality time என்பது குடும்ப மேம்பாட்டிற்கு இன்றியமையாத ஒன்றாகும். அதாவது ஒவ்வொரு நாளும் 2 மணித்தியாலயங்கள் எவ்வித இடையூறுகளுமின்றி தாய், தந்தை, பிள்ளைகள் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தும் பொன்னான நேரத்தை பெற்றோர்கள் வீட்டில் இருக்கும் போது எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என மாணவர்களுக்கு வழிகாட்டல்.

**முடிவுரை**

எனது ஆய்வு முடிவுகளின் படி, மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்காக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதை விட பொழுது போக்கு அம்சங்களுக்காகவே அதிகம் பயன்படுத்துகின்றனர். இதன் முறையற்ற பயன்பாட்டாலும் அதிகரித்த பயன்பாட்டாலும் உளவியல், சமூகவியல், சுகாதாரம் சார் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். அதிலும் முக்கியமாக துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுதல், பெற்றோர் ஆசிரியர்களை மதிக்காமை, ஆபாச சினிமாக்களைப் பார்த்தல் மற்றும் பகிருதல், களவு, பொய் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடல், போதைப் பொருள் பாவனை மற்றும் தீய நட்பு வட்டாரங்களின் உருவாக்கம் ஆகிய விழுமியத்தில் பாதிப்பை உண்டாக்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு தங்களுடைய அடையாளத்தையும் கௌரவத்தையும் சிறுவயதிலேயே இழக்க ஆரம்பித்துள்ளனர். இதனால் கற்றல் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, மாணவர்களின் விழுமியப் பாதிப்பிற்கு சமூக வலைத்தளங்கள் ஒரு முக்கிய காரணமாகக் காணப்பட்டதோடு அவர்களின் கற்றலையும் பாதிப்படையச் செய்துள்ளது என்பது தெளிவாகியது. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களைப் பாவிப்பதை முற்றாகத் தடுப்பது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும். இவற்றின் பாவனையைக் கற்றலுக்குத் தடையற்ற விதத்தில் நெறிப்படுத்த வேண்டும். இதில் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் பங்கு மிக முக்கியமானதாகும்.

**உசாத்துணைகள்**


Cvberpsychot OGY & BEHAVIOR. Volume 8, Number 2, 2005. PP. 121-130.

Divajini, 2015, *The impact of mass media on students*, Eastern university of Sri Lanka.

*How to encourage good behavior from your child* ,2003,Murdoch children’s research institute and center for community child health.

Klyoko Kamibeppu, R.N., Ph.D. And Hitoml Sugiura, R.N. (2005). *Impact of the Mobile Phone on Junior High-School Students' Friendships in the Tokyo Metropolitan Area*.

Krishnasami.W, 2001, *Informational communication*, Manivasagam publication, Chennai.

Meria Pesearo ,2014, *Consequents of parents migration on child caring and education* .

Pete Johnson,1998, *Effect of media exposure on child health,USE School of medicine.*

Ran Wei Ranwei, 2008. *Motivations for using the mobile phone For mass communications and entertainment*. Telematics and Informatics 25 (2008). PP. 36– 46

Robinson, 2006, *Sociology essays*, Boobalasingam bookshop.

Yvonne, 2008,*The Role of Parenting Stress in Young Childrens’ Mental Health Functioning after Exposure to Family Violence*, US.